Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

நமது சங்கத்தின் மார்ச் மாத ரினிவல் தொடங்குகிறது. சங்க உறுப்பினர்கள் தங்களுடைய அடையாள அட்டையை தவறாமல் ரினிவல் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- CVPA

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 18 Click - 11
FEBRUARY 2023 Re. 1

## 74 ஆவது குடியரசுதினம் சங்க அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது





74 ஆவது குடியரசுதினம் நமது சங்க அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. நமது சங்கத் தலைவர் செல் .செல்வம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்நாள், முன்நாள் சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டார்கள். ஏழை எளிய மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்களை சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்கள் வழங்கினார்.

## சங்க உறுப்பினர்களின் நம்பிக்கை எங்களை உற்சாகப்படுத்தி வேலை செய்ய வைக்கிறது

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

நமது சங்கத்திற்கு, உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் தொடர்ந்து கொடுத்து வரும் ஆதரவிற்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். சங்க தேர்தல் நடைபெறாத காலங்களில், நமது சங்க உறுப்பினர்கள் யாரும் ரினிவல் செய்ய முன் வர மாட்டார்கள் என்கிற ஒரு கருத்து பொதுவாக நிலவுகிறது. இது மட்டுமின்றி, தேர்தல் சமயத்தில் செய்யப்படும் ரினிவல் தேர்தல் ஆதாயம் கருதி, தேர்தலுக்காக மட்டுமே ரினிவல் செய்கிறார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சொல்லி வருகின்றனர். ஆனால் , இது முற்றிலும் பொய்யாக்கும் விதமாக கடந்த டிசம்பர் மாதத்தின் ரினிவல் அமைந்துள்ளது. ஆம். ஒரு தரப்பினர் செய்யும் பொய் பிரச்சாரத்தை மீறி நமது நிர்வாகத்தின் மீது நம்பிக்கை வைத்து டிசம்பர் மாதத்தில் மட்டும் 640 சங்க உறுப்பினர்கள், தங்கள் அடையாள அட்டையை ரினிவல் செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு விஷயமாகவே பார்க்கிறேன். இதற்கு, இந்த ஆண்டு விரைவாக கொடுத்து முடிக்கப்பட்ட சங்க டைரி, காலண்டர், பாக்கெட் டைரி போன்றவை மிக முக்கிய காரணமாக அமைந்ததுவிட்டது. அதேசமயம் சங்க நிர்வாகிகளும், பகுதி செயலாளர்களும் டிசம்பர்மாத ரினிவல் முடிந்த உறுப்பினர்களை நேரில் சந்தித்து டைரி மற்றும் காலண்டரை கொடுத்ததுடன், டிசம்பர் மாதம் ரினிவல் குறித்து நினைவூட்டும் பணியையும் சிறப்பாகவே செய்து முடித்தனர். இதுவும் ரினிவல் எண்ணிக்கை உயர்விற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தப் பணியை சிறப்பாக செய்ததற்காக சங்க நிர்வாகிகளையும், பகுதி செயலாளர் களையும் நான் மனதார பாராட்டுகின்றேன். இன்றுள்ள நிலவரப்படி சற்றேறக்குறைய 2000 உறுப்பினர்கள் நடப்பில் உள்ளனர். (கரண்ட் ரினிவலில்) இவர்களுக்கான விபத்து காப்பீடு முழுவதுமாக செய்யப்பட்ட நிலையில் உள்ளது. அடுத்து வரப்போகும் ரினிவலும் இதே போலவே தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். இது தவிர நீண்ட காலமாக ரினிவல் செய்யாமல் இருக்கின்ற உறுப்பினர்களை தேடிச் சென்று அவர்களை மீண்டும் சங்கத்தில் உறுப்பினராக தொடரச் செய்யும்படி கேட்டுக்கொள்ள வேண்டும் என்று நமது பகுதி செயலாளர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா கால முடிவுக்குப் பிறகு நமது நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டது. சங்கத்தில் பொருளாதாரம் இக்கட்டாக இருந்த சூழ்நிலையில், முன்னாள் நிர்வாகத்தினர் சேர்த்து வைத்து சென்றுள்ள நிதியை எடுத்து சிலவு செய்யாமல், இந்த நிர்வாகம் எடுத்த பல்வேறு முயற்சியின் காரணமாக , பொருளாதார சிக்கல் இன்றி இதுவரை அனைத்தும் சிறப்பாகவே சென்று கொண்டிருக்கிறது . ஆனால், சங்க உறுப்பினர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாக நமது நிர்வாகம் எதைச் செய்தாலும் அதை குறை சொல்வதையே வாடிக்கையாக வைத்துக் கொண்டு சிலர் செயல்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக, ஒரு சில வாட்சப் குரூப்பில், நமது சங்கம் குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை பதிவிடுவதும், சங்க நிர்வாகிகளை வசை பாடி குரல் பதிவிடுவதையும் வாடிக்கையான ஒரு விஷயமாகவே வைத்துள்ளனர். சின்ன விஷயங்களை கூட பூதாகரமான ஒரு விஷயமாக்க முயற்சிகளை செய்கின்றனர். இது குடும்ப விழாவில் தொடங்கி டைரி தயாரித்து வழங்கியது வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நமது நிர்வாகம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு, அனைத்தையும் சாத்தியமாக்கி காட்டி வருகிறது. வாட்ஸ்அப் குரூப்பில் ஒரு தனிநபரால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சங்க நிர்வாகிகளை பதில் அளிக்குமாறு வலியுறுத்துகின்றனர். சங்கத்தின் சார்பாக யாரோ ஒருவர் பதில் அளிக்க முன் வந்தால் அவரை கட்டம் கட்டுகின்றனர்.

நமது சங்கம் குறித்து ஆலோசனைகளை கூறவும்,கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் அனைவருக்கும் பொதுக்குழுவில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. பொதுக்குழுவின் ஏகோபித்த ஒப்புதலுடன் இவை தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதை விடுத்து பொதுத்தளத்தில் தனிநபரால் எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானமும் நிச்சயமாக ஏற்க முடியாது. இந்த சபை நாகரிகம் சிலருக்கு தெரிந்திருந்தும் , நமது நிர்வாகத்தின் மீது கரைப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் கேள்விக்கனைகளை தொடுக்கின்றனர் . இது இன்று நேற்று அல்ல வாட்ஸ்அப் தொடங்கிய காலம் முதல் இப்படி தான் உள்ளது.

நமது நிர்வாகத்தின் ஒவ்வொரு செயலும் செயற்குழுவின் விதிமுறைக்கு உட்பட்டு அனைவரின் ஒப்புதலையும் பெற்ற பிறகுதான் அது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது. தனிநபர் ஒருவரின் ஆளுமையின் கீழ்தான் நமது சங்கம் செயல்படுகிறது என்கிற மாயத் தோற்றத்தை சிலர் உருவாக்குகின்றனர். இதை நாங்கள் அனைவரும் முற்றிலும் மறுக்கின்றோம். சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை மட்டுமே நம்பி நாங்கள் அனைவரும் உற்சாகத்துடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**செல். செல்வம்,**
CVPA தலைவர்

# சோனியின் புதிய FX30 சினி லைன் கேமரா



சோனி யூஸர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த புதிய எஃப் எக்ஸ் 30 சினி லைன் கேமரா சமூக ஊடகங்களில் பாசிட்டிவ் விமர்சனங்களை பெற்றிருப்பதில் அனைவருமே மகிழ்ச்சியில் உள்ளனர். சோனியின் பாப்புலர் மாடல்களாக போற்றப்படும் எஃப் எக்ஸ் சினிமா லைன் சீரியஸிலிருந்து மற்றும் ஒரு மகுடமாக வெளிவந்துள்ளது எஃப் எக்ஸ் 30 கேமரா. இப்போது சோனியின் சினி லைன் கேமரா என்பது ஆறு வகையான கேமராக்களை கொண்டதாக உள்ளது. அதாவது வெனிஸ், எஃப் எக்ஸ் 9, எஃப் ஆர் 7, எஃப் எக்ஸ் 6, எஃப் எக்ஸ் 3 ஆகியவை ஆகும்.இதில் எஃப் எக்ஸ் 3 கேமராவின் மினியேச்சர் வடிவமாகவே எஃப் எக்ஸ் 30 கேமரா பார்க்கப்படுகிறது.எஃப் எக்ஸ் 30 கேமராவின் வடிவம் ஸ்டில் கேமராவை போல் தோற்றமளித்தாலும் அது மோஷன் பிக்சர்சருக்காகவே வடிவமைக்கப்பட்ட ஒரு சிறந்த கேமராவாகும். எஃப் எக்ஸ் 3 யை போலவே மெட்டல் அலைடு பாடியை கொண்ட எஃப் எக்ஸ் 30 கேமரா குறைந்த விலையில் சினி லைன் கேமராவில் உள்ள அனைத்து அம்சங்களையும் கொண்ட ஒரு சிறந்த கேமராவாக இருக்கப் போவது என்னவோ உண்மை. இந்த கேமராவை பொறுத்தவரை பேக் சைடு இலுமினேட்டட் ஏபீஎஸ் டைப் சி, சீமாஸ் சென்சாரை கொண்ட கேமரா ஆகும். இது ஒரு சூப்பர் 35 கேமரா அதாவது கிராப் சென்சாரை கொண்ட கேமரா ஆகும். சென்சாரின் அளவு 23.3 × 15.5 மிமி ஆகும். சோனி ஏற்கனவே இந்த சென்சாரைதான் எஃப் எக்ஸ் 3 கேமராவிலும் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. மெகா பிக்சலின் எண்ணிக்கையை பொறுத்தவரை வீடியோவிற்கு தோராயமாக 20.1 எனவும், ஸ்டில் இமேஜுக்கு 26 மெகா பிக்சல் எனவும் ஆக மொத்தம் 27 மெகா பிக்சல்களாக உள்ளது.







ஐஎஸ்ஓ சென்சிடிவ் ரேன்ஞ்ஜை பொறுத்தவரை மூவீஸ்க்கு 100–32000, இதன் விரிவு என்பது 50–124000 என உள்ளது. ஆட்டோ ஐஎஸ்ஓ 100– 6400 ஐ எஸ் ஓ வை பொறுத்தவரை லோயர் பேஸ், ஹையர் பேஸ் என மாற்றி அமைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது. மேலும் டூயல் பேஸ் ஐஎஸ்ஓவானது லோ லைட் உள்ள சூழ்நிலையில், 800 ஐஎஸ்ஓ–வில் இருந்து நேரடியாக 2500க்கு கொண்டு செல்லும்படி இதன் செட்டிங் உள்ளது.

பயாக்ஸ் எக்ஸ்ஆரின் உயர்தர பிராசசிங் நமக்கு ஒரு ஹை லெவல் இமேஜை கொடுக்கும்படி அமைந்துள்ளது. மேலும் சோனியின் நம்பிக்கையான, தரமான, விரைந்து செயல்படும் திறன் கொண்ட, ரியல் டைம் ட்ராக்கிங், ஐ ஆட்டோ போக்கஸ் ஆகியவை சோனியின் தனித்துவமாக அமைந்துள்ளது. இந்த கேமராவின் சென்சார் நேட்டிவ் ரெஸ்லேஷன் என்பது 6கே வாக இருந்தாலும் இதை 4கே விற்கு எளிதாக டவுன்சம்ப்லிங் செய்து கொள்ளும்படி உள்ளது. இதனால் புட்டேஜ் எல்லாம் கிரிஸ்பாகவும் ஷார்ப்பாகவும் இருக்கும் என்று நம்பலாம் .இன்பில்ட் இமேஜ் ஸ்டெபிலை சேசன் 4கே வரை படப்பதிவு செய்ய உதவுகிறது. 30,24,25,60,120 எஃப் பீ எஸ் என உள்ளது.4கே வில் 4:2:2 10 பிட் என்பது எந்த கேமராவில் கிடைக்கும் ஒரு அற்புதமான விஷயமாக பார்க்கப்படுகிறது .இது ஒரு சினி லைன் கேமரா என்பதால் எக்ஸ் ஏவீசி எஸ்1 கோடக் பயன்படுத்தப்படுகிறது. எஸ் சினிடோன், ஹெச் எல் ஜி , போக்கஸ் மேப்பிங் , போக்கஸ் பிரீதிங் கம்போசிஷன், மற்றும் எஸ் லாக் 3 ஆகியவை பிக்சர் ப்ரோஃபைலாக உள்ளது. வெகு எளிதாக கலர் கிரேடியேசன் செய்யும்படி அமைந்துள்ளது. கேமராவின் எடை குறைவாக இருப்பதால் இந்த கேமராவை கிம்பல், ட்ரோன் ஆகியவற்றில் எளிதாக பொருத்திக் கொள்ளலாம். எஃப் எக்ஸ்30 கேமராவில் ஈ மவுண்ட் அமைந்திருப்பதாலும், கிராப் சென்சாராக இருப்பதாலும் எல்லா வகையான லென்ஸ்களும் இந்த கேமராவில் பொருத்தும் படி உள்ளது. கேமராவில் சி எஃப் எக்ஸ்பிரஸ் ஏசு டைப் கார்டு ஸ்லாார்ட் இரண்டு உள்ளது. மொத்தத்தில் இந்த கேமராவானது சினி மோட்டோகிராபராக தங்களை தயார் படுத்தி குறும்படம் எடுப்பவர்களுக்கும், பிலிம் மேக்கராக மாறி, டாக்குமென்ட்ரி எடுப்பவர்களுக்கும் மிகச் சிறந்த தேர்வாக இந்த எஃப் எக்ஸ் 30 சினி லைன் கேமரா இருக்கும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது.







நமது சங்கத்தின் தென்சென்னை எஸ்2 துணைத் தலைவர் ஜெயகுமார் அவர்களின் மகன் ஆகாஷ் – நிகிதா ஆகியோரின் திருமணம் இம்மாதம் சென்னையில் நடைபெற்றது. இத்திருமண விழா வரவேற்பு நிகழ்ச்சியில் இந்நாள், முன்னாள் சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



வடசென்னை பட்டாபிராம் பகுதியைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் திரு. ரமேஷ் அவர்களின் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் செயலாளர் திரு. D.M. பிரேம்குமார், மத்திய சென்னை துணைத் தலைவர் திரு. M. வேல்முருகன், புரசைவாக்கம் பகுதி செயலாளர் A.சீனிவாசன், பட்டாளம் பகுதி செயலாளர் R.திலீப் குமார் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, புளியந்தோப்பு பகுதியை சேர்ந்த, புகைப்பட கலைஞர், திரு . இயேசுதாஸ் அவர்களின் மகள், திருமண வரவேற்பில் சங்கம் சார்பாக மத்திய சென்னை துணைத்தலைவர், M.வேல்முருகன் புரசைவாக்கம் பகுதி செயலாளர் A.சீனிவாசன் பட்டாளம் பகுதி செயலாளர் R.திலீப் குமார் மற்றும் முன்னாள் நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை சங்கம் சார்பாக வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை , பட்டாளம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர் திரு.E. குலசேகரன் அவர்களின் மகனுடைய திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மத்திய சென்னை துணைத்தலைவர், திரு. M. வேல்முருகன் மற்றும் பட்டாளம் பகுதி செயலாளர், R. திலீப் குமார், புரசைவாக்கம் பகுதி செயலாளர் திரு. A. சீனிவாசன் மற்றும் சங்க உறுப்பினர்கள் சங்கம் சார்பாக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

# பென்டிரைவ் காணவில்லை




என்னுடைய பாக்கெட்டில் இருந்த 32GB பென்டிரைவ்வை (கருப்பு நிறம்) 03.02.2023. அன்று எங்கோ தவற விட்டு விட்டேன். அதில் என்னுடைய குடும்பம் மற்றும் ஸ்டுடியோ சம்பந்தமான ஃபோட்டோ இமேஜ் போன்றவை உள்ளன. இதை கீழே கண்டெடுப்பவர்கள் என்னிடம் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

**S. டிக்கால்**
CVPA உறுப்பினர் எண் 723
மை சன் ஸ்டுடியோ
177. சூரிய நாராயண தெரு,
ராயபுரம், சென்னை. 13.
செல்பேசி எண் : 98400 49765

## நமது சங்கத்தின் முன்னாள் செயலாளர் அமரர் ரவிச்சந்திரன் அவர்களின் நினைவு நாள்






நமது சங்கத்தின் முன்னாள் செயலாளர் அமரர் ரவிச்சந்திரன் அவர்களின் நினைவு நாள் சங்க அலுவலகத்தில் அனுசரிக்கப்பட்டது. சங்கத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், மற்றும் பகுதி செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். ஏழை எளிய மக்களுக்கு சங்கத்தின் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.






நமது சங்கத்தின் வடசென்னை பகுதி மூத்த புகைப்பட கலைஞர் மறைந்த திரு நாதன் அவர்களின் மூத்த மகனும் தண்டையார்பேட்டை பகுதியை சார்ந்த உறுப்பினர் திரு விமல் தீபன் அவர்களின் அண்ணனுமாகிய திரு விஜய் ஆனந்த் மற்றும் திரேசா ப்ரீத்தியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் வடசென்னை துணைத் தலைவர் A.கௌஸ் பாஷா அவர்களும் மற்றும் சங்க திருவொற்றியூர் பகுதி செயலாளர் A.மேகநாதன் அவர்களும் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்க உறுப்பினர் சரவணன் அவர்களின் மகள் ஸ்வேதா – ரோஹித் இவர்களின் திருமணம் கடந்த மாதம் நடைபெற்றது. நமது சங்கத்தின் தேனாம்பேட்டை பகுதி செயலாளர் டி.எம்.ரவி அவர்களும் முன்னாள் பிஆர்ஓ. புருஷோத்தமன் அவர்களும், சீனியர் ஜர்னலிஸ்ட் சிவபெருமாள் அவர்களும் மணமக்களை நேரில் வந்து வாழ்த்தினார்கள்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.02.2023

To